**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , MUDUKULATHUR**

Case No.CC.03/2022
Prosecution witness.07

| | |
|---|---|
| பெயர் : டாக்டர்.ஜெயமலர் | ஜாதி : |
| தந்தை பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 14th day of February 2024.

14.02.2024

(எதிரிகள் 1, 3, 4, 5 ஆஜர், எதிரி 2 ஆஜர் இல்லை. 2ம் எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**முதல் விசாரணை**

**1.** நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது காரைக்கால் அரசு மருத்துவமனையில் உதவி அரசு மருத்துவராக பணியாற்றி வருகிறேன். நான் முதுகுளத்தூர் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது 14.08.2021ம் தேதி மதியம் 02.50 மணியளவில் கீழக்கன்னிச்சேரி கிராமத்தை சேர்ந்த முனியம்மாள், க/பெ.வெள்ளிமுத்து என்பவரை அவரது மகள் ராஜேஸ்வரி சிகிச்சைக்காக அழைத்து வந்தார்.

**2.** முனியம்மாள் என்னிடம் தெரிந்த 2 ஆண் மற்றும் 2 பெண் அடித்ததாக கூறினார். அவரை பரிசோதித்த போது அவருக்கு எந்தவிதமான வெளிப்புற காயங்களும் காணப்படவில்லை. அவர் நடப்பதற்கு சிரமப்பட்டதால் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக அனுப்பிவைத்தேன். முனியம்மாளை இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் மேல்சிகிச்சைக்காக மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்துள்ளார்கள். மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் முனியம்மாளுக்கு இடதுதொடை எலும்பில் முறிவு ஏற்பட்டதாக கொடுத்த கருத்துரையின் அடிப்படையில் நான் கொடுங்காயம் என்று சான்று

அளித்தேன். **(முனியம்மாளுக்கு வழங்கப்பட்ட காயச்சான்றுடன் கூடிய விபத்து பதிவேடு அசா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1 முதல் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) காயம்பட்ட நபர் என்னிடம் சிகிச்சைக்கு வந்தபின்பு தான் நான் காவல்துறையினருக்கு தகவல் தெரிவித்தேன் என்றால் சரிதான். எத்தனை மணிக்கு தகவல் தெரிவித்தீர்கள் என்றால் நேரம் எனக்கு சரியாக நினைவில் இல்லை. காயம்பட்ட நபர் முதுகுளத்தூர் அரசு மருத்துவமனையில் ஒரு மணிநேரம் சிகிச்சையில் இருந்தார். நான் முதலுதவி சிகிச்சை மட்டும் தான் செய்தேன் என்றால் சரிதான். ராமநாதபுரம் அரசு மருத்துவமனை மற்றும் ராஜாஜி அரசு மருத்துவமனையில் காயம்பட்ட நபருக்கு வழங்கப்பட்ட சான்றிதழ்களை பார்வையிட்டு சான்றிதழ் வழங்கினீர்களா என்றால் ஆம்.

2) காயம்பட்ட நபர் முதுகுளத்தூர் அரசு மருத்துவமனையில் மேல்சிகிச்சைக்காக அனுப்பப்பட்ட பின்பு காயம்பட்ட நபர் எங்கு சிகிச்சையில் இருந்தார் என்பதை என்னால் அறியமுடியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. காயம்பட்ட நபருக்கு வயது 70 ஆகும். காயம்பட்ட நபர் 70 வயதுடைய முதியவர் என்பதால் அவருக்கு Osteoporosis (எலும்பு தேய்மானம்) ஏற்பட்டும்போது வலி ஏற்படுவதற்கும், எலும்பு முறிவு ஏற்படுவதற்கும் வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான்.